www.tamilarangam.net

EPIC

# ஈழச் செய்தி

# EELAM NEWS

POST BAG 5551, MADRAS-600094 INDIA

கடிதம்: 9 5-5-1983

## தலைமை மாறுகின்றது?

இலங்கையில் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் அரச பயங்கரவாதங்கள் சியோனிச இஸ்ரேல், இனவாத தென்னாப்பிரிக்கா ஆகியவற்றிலும்விட மிக மோசமாக நடைபெறுகின்றது.

அகதிகளாக வந்த தமிழ்மக்களின் குடிசைகள் தீக்கிரை

இராணுவ முகாம்களில் போராளிகள் கொலை

சாத்விகப்போராட்டங்கள் அரச பயங்கரவாதத்தால் ஒடுக்குதல்

மாணவர்கள் இளைஞர்கள் தொடர்ச்சியாக கைது.

பெண்கள் சித்திரவதை முகாம்களில் இவைபோன்ற பலப்பல அடக்கு முறைகளும் ஒடுக்கு முறைகளும் தவ பாசிச அரசால் ஏவிவிடப்படுகின்றன.

ஈழம் இன்னொரு வியட்னாமாக, எல்சல்வடோராக, இன்னொரு பாலஸ்தீனமாக மாறி வருகின்றது. விடுதலைப் போராட்டங்கள் தோற்றதாக வரலாறு இல்லை. ஆனால் முதலாளித்துவ வாதிகளோ ஏகாதிபத்தியவாதிகளோ அல்லது அடக்கு முறையாளர்களோ இதை இன்னும் உணர்வதாய் இல்லை. எங்கெங்கோ எல்லாம் மரண அடி வாங்கியும் இன்னும் இரத்தவெறி பிடித்தே அலைகின்றார்கள். இவர்கள் மீண்டும் ஓர் அடி ஈழத்தில் வாங்காமல் ஓய்வதில்லை என்று கங்கணம் கட்டியவர்கள் போல் துள்ளித் திரிகின்றார்கள்.

அண்மைக்கால ஈழத்து நடவடிக்கைகளை அவதானிக்கும் பொழுது மக்களும் அதற்கு தயாராவதாகவே தோன்றுகின்றது. தொழிலாளர்கள், விவசாயிகள் பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் எல்லோரும் ஒரே அணியில் திரள்வதானது முன்னேற்றப் பாதையின் அறிகுறியே. முழக்கவாதிகளின் கைகளில் இருந்து புரட்சிவாதிகளின் கைக்கு தலைமை மாறுவதானது மிகவும் சிரமமான ஒன்றே. ஆனால் இன்று ஈழத்தில் தலைமை மாற்றம் உருவாகுவதை அவதானிக்கும்போது, நிச்சயம் விடுதலை அண்மிப்பதையே அறிவுறுத்துகின்றது.

சோசலிச ஈழத்தை நிறுவுவதற்கு தமது உயிரையே அர்ப்பணித்து போராடும் தோழர்களுக்கு உலக தேசமக்களே உங்கள் ஆதரவை அளியுங்கள். தமிழகத் தமிழர்களே, இந்திய மக்களே சிறிலங்கா அரச வன்முறைக்கெதிராக் உங்கள் கண்டன முழக்கங்கள் முழங்கட்டும்.

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLES' INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH : EPIC B M Box 1738, LONDON WC 1 N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழமக்கள் விடுதலை முன்னணி உதயம் !
## ஐந்து புரட்சிகர [illegible] ஒன்றிணைந்தன !

ஈழ மாணவர் பொது மன்றம், ஈழ [illegible] முன்னணி, கிராமியத் தொழிலாளர், விவசாயிகள் முன்னணி,
ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, கடல் தொழிலாளர் முன்னணி என்பவை ஒன்றிணைந்து ஈழமக்கள் விடுதலை முன்
னணி ( P L F ) என்ற பெயரில் புதிய மக்கள் இயக்கம் ஒன்றை கட்டியெழுப்பியுள்ளனர். ஈழ மாணவர் பொது மன்
றம் நடத்தவிருந்த நீண்ட புரட்சிகர பயணத்தை இம்மக்கள் முன்னணியே நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

"ஈழ தேச விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் முன்னெடுக்க உறுதி வாய்ந்த மக்கள் இயக்
கம் ஒன்று அவசியம், இன்றைய கால கட்டத்தின் தேவையாகவே எமது ஈழ மக்கள் விடுதலை முன்னணி உதய
மாகியுள்ளது." என அதன் இணைச் செயலாளர்களில் ஒருவரான தோழர் டேவிற்சன் தெரிவித்தார்.

O O O

## புரட்சிகர பயணத்தில் கண்ணீர் புகை பிரயோகம்
## சிறிலங்கா அரசின் ஈழமக்கள் மீதான ஒடுக்குமுறை

முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் இருக்கக்கூடிய அற்ப,சொற்ப உரிமைகளையும்சிறிலங்கா நவபாசிச
அர - குழிதோண்டி புதைத்துள்ளது. ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றுக்கும் அனுமதி மறுக்கப்பட்டு வரு
கிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்ப்போம்.

சிறிலங்காவின் சித்திரவதை முகாமிலுள்ள ஈழப் போராளிகளை விடுவிக்கப் போராடுவோம்.

அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிராக போராடுவோம் போன்ற கோசங்களை முன்வைத்து ஈழமக்கள்
விடுதலை முன்னணி நீண்ட புரட்சிகர எழுச்சி யாத்திரையை நடத்த திட்டமிட்டிருந்தது.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக யாழ்குடா நாடெங்கும் நடக்கவிருந்த இப்புரட்சிகர பயணத்திற்கு அனு
மதியளிக்க முடியாது என சிறிலங்கா பொலிசார் அறிக்கை விடுத்தனர்,

ஆனாலும் திட்டமிட்டபடி யாத்திரையை நடத்த ஈழமக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்தது,

யாழ் சென் ஜேம்ஸ் ஆலய முன்பாக நடக்கவிருந்த யாத்திரை சிறிலங்கா இராணுவ, பொலிஸ் கூட்டுக் கும்
பல் அவ்வீதியை தடை செய்து சூழ்ந்து நின்றதால் திடீரென வெரோர் இடத்திற்கு மாற்றப்பட்டு சுமார் இரண்டாயி
ரம் தொண்டர்களுடன் புறப்பட்டது.

"முழக்க தலைமைகளை தூக்கி வீசுவோம்" "புரட்சிகர தலைமையை கட்டி அமைப்போம்" புரட்சி
என்பது மாலை விருந்தல்ல" "தண்டிக்கப்பட வேண்டியது சிறிலங்கா - நீதி மன்றம் தகர்க்கப்
பட வேண்டியது அரசு" "உலகத் தொழிலாளரே ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள்" முதலாளித்துவ நீதி
மன்றத்தின் தீர்ப்புகள், மக்கள் மன்றத்தில் பொசுக்கப்படும்" போன்ற புரட்சிகர கோசங்களையும், சுலோக அட்டை
களையும் தாங்கியவாறு ஊர்வலத்தினர் முன்னேறினர்; ஊர்வலம் புறப்பட்டதை அறிந்த சிறிலங்கா கூலிப்படை
கள் திடீரென வந்து ஊர்வலத்தை முற்றுகையிட்டன.

"உடன் கலைந்து செல்லுங்கள் இல்லா விடின் சுடுவோம் ,,என பாசிசப்பட்டாளத்தின் அதிகாரி எச்சரித்தார்.
அப்போது மக்கள்படை வருகிறது. கூலிப்படையே வெளியேறு. "எமது சக்தி மக்கள் சக்தி,, "எமது பாதை புரட்சிப்
பாதை போன்ற கோசங்களை ஊர்வலத்தினர் கோசித்த வண்ணம் கலைந்து செல்லமாட்டோம் எனக்கூறினர்.

உடன் ஊர்வலத்தின்மீது கண்ணீர்புகை குண்டுகளை வீசிய சிறிலங்காவின் கொலைப்பட்டாளங்கள் முன்
னணி வரிசையில் நின்ற சில வாலிபர்களை தமது வண்டிகளில் இழுத்து ஏற்றியது. 50 சைக்கிள்களையும் கைப்பற்றி
சென்றது.

கண்ணீர் புகை குண்டு வீச்சினால் மயங்கிவிழுந்த ஆண்களும் பெண்களும் உடன் மீண்டும் ஒன்று
கூடி யாழ் பெரிய கோவில் வளவில் தோழர் டேவிற்சன் தலைமையில் சத்தியாக்கிரகம் இருந்தனர். சத்தியாக்கிர
கத்தை கைவிட்டு கலைந்து செல்லுமாறு சிறிலங்கா பாசிச படைகள் கூறிய போதும் சத்தியாக்கிரகம் தொடர்ந்தும்
நடைபெற்றது.

இப் புரட்சிகர பயணத்தில் பங்கு கொள்ள சிறிலங்காவில் இருந்தும் பலர் வந்திருந்து குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழ மக்கள் வாழ வேண்டுமானால் நவபாசிஸ்டுகளை எதிர்த்துப் போராட வேண்டும்

"எமது பாச பூமியான ஈழ தேசம் சிதைக்கப்பட்டுவரும் இன்றைய நிலையில் இனியும் ஈழ மக்கள் வாழ வேண்டுமானால் சிறிலங்கா நவ பாசிஸ்டுகளை எதிர்த்து போராட வேண்டும். முதலாளித்துவ வாதிகளை இனம் கண்டு புரட்சிகர தலைமையை உருவாக்க ஈழ மக்கள் வெகுஜன ஸ்தாபனங்களில் அணிதிரள வேண்டும். மக்கள் போராட்டம் ம்மட்டிஅடிகளால் அடிமை விலங்குகளை பொடிப் பொடியாக்க வேண்டும். போராட்டங்களின் ஊடாக புரட்சிகர தலைமையை இனம் காண்போம்." மேற்கண்டவாறு பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்ட அறிக்கையில் ஈழமக்கள் விடுதலை முன்னணியினர் (F.P.L.F.) தெரிவித்துள்ளனர்.

O O O

## கொலைப் பட்டாளத்தின் ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பு யாழ்குடா நாட்டில் பூரண ஹர்த்தால்!

புரட்சிகர யாத்திரை மீது சிறிலங்கா நவபாசிசகொலைப் பட்டாளங்கள் கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக ஏப்பிரல் 6ம், 7ம் திகதிகளில் யாழ்குடா நாட்டில் ஹர்த்தால் அனுட்டிக்குமாறு ஈழமக்கள் விடுதலை முன்னணி விடுத்த அறைகூவல் வெற்றி பெற்றது. யாழ் நகரில் கறுப்பு கொடிகள் பறந்தது. ...ன் யாத்திரை செல்லவிருந்த பிரதான சந்திகள் சிகப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வீதிகளில் வந்த மக்களை தாக்கிய சிறிலங்கா இனவெறிப்பட்டாளங்கள் சிவப்பு கொடிகளை சில இடங்களில் அறுத்து எறிந்தன.

O O O

## யாழ் உயர்நீதிமன்றத்தில் குண்டு வெடித்தது!

சிறிலங்கா முதலாளித்துவ அரசின் இயந்திரங்களில் ஒன்றான நீதி மன்றத்தில் குண்டுகள் வெடித்தது. யாழ்ப்பாணத்திலுள்ள சிறிலங்கா உயர் நீதிமன்றத்திலேயே இச் சம்பவம் ஏப்ரல் 7ம் திகதி அதிகாலை இடம் பெற்றது. இதனால் நீதிபதிகள் தங்கும் அறைகள் சேதமாகின. இலங்கையிலேயே நீதிமன்றம் ஒன்றுக்கு குண்டு வைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

O O O

## பஸ் வண்டிக்கு தீ வைப்பு, கல்வீச்சு!

ஏப்ரல் 6ம் திகதி அதிகாலை யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைக்கோட்டையில் சிறிலங்கா போக்குவரத்து சபையின் பஸ் வண்டி ஒன்றுக்கு துப்பாக்கி வாலிபர்கள் தீ வைத்தனர். அல்லைப்பிட்டி, நெல்லியடி போன்ற இடங்களில் பஸ் வண்டிகள் கல்வீச்சுக்கு இலக்காகின.

O O O

## பன்குளத்தில் பதினாறு குடிசைகள் தீக்கிரை

பாரம்பரியத் தமிழ் பிரதேசமான திருகோணமலை திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தால் இன்று அரைவாசிக்கும் மேல் சிங்கள மக்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இம்மாவட்டத்தில் உள்ள "பன்குளம்" என்ற கிராமத்தில் அகதிகளாக வந்த மலையகத் தமிழர்கள் காந்தீயம் என்ற அமைப்பினால் குடியேற்றப்பட்டார்கள். இதனை விரும்பாத சிங்கள உத்தியோகத்தர்கள் இக்குடிசைகளை தீமூட்டி கொழுத்தியுள்ளார்கள். இதற்கெதிராக வழக்கு தாக்கல் செய்யச் சென்ற அப்பாவி மக்கள் பொலிசாரினால் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளார்கள். அங்கு தொண்டர்களாய் கடமையாற்றிய இளைஞர்கள் பெண்கள் ஆகியோர் இராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை விடுதலை செய்யுமாறு கோரிய காந்தீயத் தலைவர் டாக்டர். ராஜசுந்தரமும் இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

O O O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கிரிமினல்களிடம் யாழ் கூட்டுறவுக் கணக்குக் கோவை சிக்கியது எப்படி?

யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபையின் தலைவரும்தமிழர் விடுதலைக் கூட்டணி கோப்பாய் தொகுதி பாராளு
மன்ற உறுப்பினருமான திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள் யாழ் கூட்டுறவு சங்கத்தில் இலட்சக்கணக்கான ரூபாய்
ஊழல் புரிந்தாரெனக்கூறி புலிப்படையினர் இவரைசுட்டுகாயப்படுத்தி இருந்தனர். அத்துடன் அவர்கள் வெளியிட்ட
அறிக்கையில் ஆலாலசுந்தரத்தின் ஊழலையும் அம்பலப்படுத்திஇருந்தனர். பின்னர் இதற்கு ஓர்மறுப்பு அறிக்கை
ஆலாலசுந்தரம் அவர்களால் யாழ் கூட்டுறவு சபையினூடாக விடுக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக எதிர்க்கட்சித்
தலைவரும் த.வி.கூ செயலாளர் நாயகமு மாகிய அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் சிறிலங்கா பாராளுமன்றத்
தில் பேசும்பொழுது முக்கியமான நபர்களுக்கு கணக்குக்கோவை போகுமுன் இக்கிருமினல்களுக்கு எவ்வாறு கிடைத்த
தென்பதை விசாரணை செய்யவேண்டுமென்று கோரியுள்ளார். இதுவரை காலமும் சிறிலங்கா அரசு மாத்திரமே விடு
தலைப் போராளிகளை பயங்கர வாதிகள் கிரிமினல்கள் என்று கூறியுள்ளது.ஆனல் தமிழர் தலைவர் என்றும் விடு
~~நலை ... திரு. அமிர்தலிங்கம் ... விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள். கிரிமினல்கள்~~
என்று கூறியுள்ளார். திரு.
லாய்க்கின்ருர்கள்.

O O O

## த.வி.கூ. பா. உ க்கள் உண்ணுவிரதம்

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் 22ம் திகதி ஒருநாள் அடையாள உண்ணாவிர
தம் இருந்தார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை அகற்றும்படி வேண்டியே இவர்கள் உண்ணுவிரதம் இருந்த
தாகத் தெரிகிறது

குறிப்பு:- ஈழமாணவர் பொது மன்றம், ஈழவிடுதலை முன்னணி, யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை போன்றவை
இச்சட்டத்திற் கெதிராக பல தொடர்ச்சியானபோராட்டங்களை நடத்தின.அப்பொழுது நீங்கள் ஏன் இவற்
றில் பங்குபற்றவில்லை என்று கேட்ட பொழுது தனக்கு அழைப்பு வரவில்லை. இவையெல்லாம் சிறு பிள்
ளைத்தனம் என்று கூறியவர்கள் மாநகர சபை தேர்தல் வந்ததும் உண்ணு விரதம்இருக்கிருர்கள்.

O O O

## ஈழ விடுதலைப் புலிகள் எங்கே?

ஈழ விடுதலைப் புலிகள் எனும் அமைப்பைச்சேர்ந்த இருவர் வேறு ஒரு குழுவைச் சார்ந்த இருவருடன்
சென்னை பாண்டி பசாரில் துப்பாக்கிச்சமரில் ஈடுபட்டது யாவரும் அறிந்ததே இது வரை பிணையில் விடுதலை செய்
யப்பட்டிருந்த இவர்களின் வழக்கு 21ம் திகதி ஏப்ரல் மாதம் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப் படுவதாய்இருந்
தது ஆனல் அதற்கு முன்னரே ஈழ விடுதலை புலிகள் என்ற அமைப்பைச் சேர்ந்த பிரபாகரன் இராகவன் என்ற
இருவரையும் காணவில்லை இவர்களை இலங்கை அரசே கடத்திச் சென்றதா? இல்லையேல் இவர்களே தலைமறை
வாகி விட்டார்களா? தமிழகப் பொலீசும் இலங்கை பொலீசும் இவர்களை தேடுவதில் ஈடுபட்டுள்ளதாக பத்திரிகைச்
செய்திகள் தெரிவிக்கின்றன.

O O O

## மட்டக்களப்பில் 12 இளைஞர்கள் கைது

யாழ் நகரில் நடக்கவிருந்த புரட்சிகர எழுச்சி யாத்திரைக்கு மக்களிடம் பிரச்சாரம் செய்வதற்கு மட்டு
நகர் சென்ற ச மக்கள் விடுதலை முன்னணியைச்சார்ந்த யாழ் உறுப்பினர்களான தோழர்கள் வரதராஜப்பெருமாள்
(விரிவிரையாளர் யாழ் பல்கலைக் கழகம்) மகேஸ்வரராஜா (யாழ் பல்கலைக்கழக கலைப்பட்டதாரி) செல்வத்தம்பி
கோணேஸ்வரன் (திருமலை) ஞா. பத்மநாதன் (தம்பிலுவில்) வீ. சண்முகநாதசிவம் (தம்பிலுவில்) ச. பேரின்ப
ராஜா (யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபட்டதாரி தம்பிலுவில்) செ. சிவலிங்கம் (பெரியகல்லாறு) வீ. சுந்தரலிங்கம்
(பெரியகல்லாறு) எஸ்.பிரேமானந்தன் (காரைதீவு) ந. விஜயகுமார் (காரைதீவு) சிறிஸ்கந்த ராஜா (பட்டிருப்பு) ஆகி
யோர் மட்டுநகரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்
பட்டுள்ளனர்.

O O O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டு நகரில் மாணவர் போராட்டம்

மட்டுநகர் மாணவன் எஸ். பிரேமானந்தன் கைதுசெய்ததையும் ஏனைய மாணவர்கள் இளைஞர்கள் கைது செய்ததையும் கண்டித்து மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலய மாணவர்கள் 5—4—88 வகுப்புக்களை பகிஸ்கரித்தனர். இவர்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பு சென்மிக்கேல் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, உட்பட அனைத்துக் கல்லூரிகளும் பகிஸ்கரிப்பிலீடுபட்டன. இவர்களை உடன் விடுதலை செய்யுமாறு கோரி மட்டக்களப்பு பல்கலைக் கழக கல்லூரி மாணவர்களும் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

O O O

## எம். ஜி. ஆர் மன்றச் செயலாளர் இராணுவத்தால் தாக்கப்பட்டார்

28 8—88 திங்களன்று பொலிகண்டியில் தனதுவீட்டு வாசலில் நின்ற எம். ஜி. ஆர் மன்றச் செயலாளர் இராணுவத்தால் மிருகத் தனமாகத் தாக்கப்பட்டார். இவர்செய்த குற்றம் இராணுவத்தினர் வீதியால் போகும்பொழுது இவர் தனது வீட்டு வாசலில் நின்றதே. இவரைத் தாக்கியஇராணுவத்தினர் பின்னர் அவ் வீதி வழியே சைக்கிளில் சென்ற இராசலிங்கம் என்ற இளைஞரையும் தாக்கியுள்ளனர்.

O O O

## வல்வெட்டித் துறை காவல்நிலையம் மீது துப்பாக்கிச் சூடு

சைக்கிளில் வந்த இனந் தெரியாத இளைஞர்குழு ஒன்று வல்வெட்டித்துறையில் உள்ள சிறிலங்கா அரசின் காவல் நிலையம் மீது 7.4.88 இரவு 11 மணிக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், பொலீசாரும், இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டதாகவும் ஆனல் யாரும் காயம் அடையவில்லையென்றும் செய்திகள் கூறுகின்றன.

O O O

## இந்திய வெளிநாட்டமைச்சர் சிறிலங்கா பயணம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவோ அவர்கள் மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு சிறிலங்கா பயணமாகின்றார். இவர் இலங்கைத் தமிழர் பிரச்சனை உட்பட சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் உயர் மட்டப் பேச்சு வார்த்தை நடத்துவார் எனத்தெரிய வருகின்றது.

O O O

## வெளிநாட்டமைச்சருக்கு நெடுமாறன் தந்தி

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் அவர்கள் இந்திய வெளிநாட்டமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள தந்திச்செய்தியொன்றில் இலங்கையில் தமிழர் பிரச்சனை பற்றி முடிவெடுக்கு முன்னர் ,தமிழ்நாட்டுத் தலைவர்களுடனும் இலங்கையில் உள்ள தமிழ்த் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

O O

## வவுனியாவில் கடையடைப்பு

காந்தியத் தலைவர் டாக்டர் இராஜசுந்தரம் கைதானதையும் ஏனைய காந்திய அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டதையும் கண்டித்து 8-4-88 வவுனியா வர்த்தகர்கள் கடைகளை அடைத்து எதிர்ப்பை தெரிவித்தனர். இராணுவத்தினரும் போலீசாரும் துப்பாக்கி முனையில் கடைகளைத்திறக்குமாறு மிரட்டியும் வியாபாரிகள் கடைகளைத் திறக்க மறுத்து விட்டார்கள்.

O O O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பரந்தாமன் நீதிவான் முன் ஆஜர்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி இராணுவக் காவலில் உள்ள யாழ் பல்கலைக் கழக ஆய்வு கூட உதவியாளர் பரந்தாமன் 5-8-88 அன்று கொழும்புக் கோட்டை கூட்டு நீதிவான் ஜனாப். எஸ். ஐ. இமாம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவர் மீதான விசாரணை முடியவில்லையென இரகசிய பொலிசார் தெரிவித்ததை அடுத்து எதிர்வரும் 25ம் திகதி வரை காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

O O O

## பெரியதுறையில் நிரந்தர இராணுவ முகாம் நிறுவுவதற்கு ஆட்சேபனை

யாழ் மாவட்டத்தை முழுக்க முழுக்க இராணுவ ஆட்சிக்குட்படுத்தியிருக்கும் சிறிலங்கா அரசானது இன்னொரு தமிழ் மாவட்டமான மட்டக்களப்பையும் இராணுவ ஆட்சிக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. தற்போது மட்டக்களப்பு பெரிய துறையில் ஓர் நிரந்தர முகாமமைக்க முயற்சித்து வருகின்றனர். பெரியதுறை மக்கள் இங்கு இராணுவ முகாம் அமைப்பதற்கு மிகவும் கடுமையாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

O O O

## சிறிலங்கா கொலை முகாமில் ஈழப் போராளி கொலை

புரந்தன் உமையாள்புரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது இனம் தெரியாத வாலிபர்கள் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக கைது செய்யப்பட்ட கிளிவெட்டியைச் சேர்ந்த க. தவரத்தினராஜா எனும் ஈழ விடுதலைப் போராளி கொலை செய்யப்பட்டுள்ளார்.

குருநகரில் உள்ள கொலை முகாமிற்கு அழைத்து வரப்பட்ட தவரத்தினராஜா மீது நரபலிக்கும்பலான இராணுவம் மிக மோசமாகத் தாக்கியுள்ளது. இதனால் அவர் மரணமாகிவிட்டார். ஆனால் குருநகர் முகாமின் பொறுப்பதிகாரிகள் சுகயீனம் காரணமாக அவர் இறந்ததாக அறிவித்துள்ளனர். கொலைமுகாமில் படுகொலையாகும் போராளிகள் பட்டியல் தொடர்கிறது.

O O O

## லண்டன் மகேஸ்வரன் தப்பியோடினாரா?

புல்மோட்டை வங்கிக் கொள்ளை சந்தேக நபரான மகேஸ்வரன் என்பவர் சிறிலங்காவிலுள்ள பனாகொடை வதை முகாமிலிருந்து தப்பி ஓடிவிட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. பலத்த காவலிலுள்ள இவ்வதை முகாமிலிருந்து தப்பிச்செல்வது கடினமானது என்பதால் இவர் சில நேரங்களில் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

O O O

## யாழ் செயலகம் குண்டு வைத்து (கச்சேரி) தாக்கப்பட்டது

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சிறிலங்கா நவபாசிச கொலைப்பட்டாளங்களது அதிகாரிகளும் பாதுகாப்பு மகாநாடு நடாத்தவிருந்த யாழ் செயலக அறை இனம் தெரியாத வாலிபர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது அங்கு நின்ற நான்கு அரச ஜீப் வண்டிகளும் தீ வைத்து சாம்பலாக்கப்பட்டன. "புலிகளைப் பிடிக்க முடியாது" என்ற வாசகம் செயலகம் முன்பு உள்ள மதிற்சுவர்களில் எழுதப்பட்டு இருந்தது.

O O O

## உண்ணாவிரதம்

கூட்டணி தலைவர்களில் ஒருவரான கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் மு. ஆலாலசுந்தரம் கூட்டுறவுச் சங்க ஊழல் தொடர்பாக எச்சரிக்கை செய்யுமுகமாக ஈழவிடுதலைப் புலிகளால் சுடப்பட்டார். இதைக் கண்டித்து ஆவரங்காலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் ஆலாலசுந்தரத்தின் மனைவி உட்பட்ட மொத்தம் இருபது பேர் பங்கு கொண்டனர். யாழ்குடா நாடெங்கும் ஆலால சுந்தரத்திற்கு எதிரான சுவரொட்டிகள் காணப்பட்டன.

O O O

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்தியாவில் ஈழ முழக்கம்

ஈழ மாணவர் பொது மன்ற இந்தியக்கிளை முழக்கம் என்ற மாத சஞ்சிகை ஒன்றை வெளியிடத் தொடங்கியுள்ளது. இதன் முதலாவது இதழ் ஏப்பிரல் மாதம் வெளியானது. ஈழப் போராட்டம் பற்றிய பல அரிய கருத்துக்களை தாங்கியதாகவும் கதை கட்டுரைகளை உள்ளடக்கியதாகவும் இது உள்ளது. இவர்களது இரண்டாவது இதழ் "ஈழ முழக்கம்" என்ற பெயரில் வெளிவருகிறது. இவர்களது முழக்கம் தொடர்ந்து முழங்க ஈழச் செய்தியும் தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது. இவர்களது விற்பனை பிரதிநிதியாக ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிறுவனம் செயற்படுகின்றது. ஈழ முழக்கம் பெற விரும்புவோர் ஆண்டுச்சந்தாவாக ரூபா 15ம் அரை ஆண்டுச் சந்தாவாக ரூ. 7-50 போஸ்டல் ஆடராகவோ அன்றி மணி ஆடராகவோ அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி: EPIC, Post Bag No. 5551
Choolaimedu, Madras 94.

O O O

## ஐ. தே. க. வேட்பாளர்கள் வாபஸ்

இலங்கையில் மாநகர, நகரசபைத் தேர்தல்கள் நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சார்ந்த மூன்று ஆளும் ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர்கள் தீவிர வாதிகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 14 பேர் (ஐ.தே.க. வேட்பாளர்கள்) தேர்தலிருந்து ஒதுங்கி வாபஸ் வாங்கலாம் எனத் தெரிய வருகின்றது. இதனால் தமிழர் விடுதலைக்கூட்டணி கூடிய இடங்களைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது.

O O O

## ஆளும் கட்சியைச் சார்ந்த மூவர் கொலை

இலங்கையில் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை போன்றவற்றிற்கான தேர்தல் இம்மாதம் நடைபெற உள்ளது., இதில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கைத் தமிழ்காங்கிரஸ் போன்ற பல கட்சிகள் போட்டியிடுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நகரசபை பட்டின சபைகளுக்கு போட்டியிட இருந்த ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தினர் மூவர் 29.4.88 அன்று இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர் பருத்தித்துறையைச் சார்ந்த கே. வி. இரத்தினசிங்கம் நண்பகல் 1.30 மணி அளவிலும் சாவகச்சேரியைச்சார்ந்த கே. முத்தையா மாலை 4 மணி அளவிலும், யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் கே. கணேசலிங்கத்தின் மெய் பாதுகாவலர் 4 .30 மணியளவிலும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரத்தினசிங்கத்துடன் சென்ற அவரது நண்பர், ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

O O O

## சென்னை எங்கும் ஈழமாணவர் பொது மன்ற சுவரொட்டி

இலங்கையில் நடைபெறும் அரச பயங்கர வாதத்தைக் கண்டித்தும், இதற்கெதிராக இந்திய மக்கள் தம்து கண்டன முழக்கங்களை முழங்க வேண்டும் என்று கோரியும் ஈழமாணவர் பொது மன்றத்தின் இந்தியக் கிளை சென்னை மாநகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது ஈழத்தில் அரச பயங்கரவாதம் தொடர்கின்றது, என்றதலைப்பில் உள்ள அச்சுவரொட்டியில், பாதயாத்திரை சென்றோர் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம், மட்டு நகரில் விரிவுரையாளர், மாணவர், இளைஞர்கள் கைது,திருமலையில் சிறிலங்கா அரசினால் 16 வீடுகள் தீக்கிரை, காந்தியத் தலைவர் தொண்டர்கள் கைது, சித்திரவதை முகாம்களில் பெண்கள், இராணுவ முகாம்களில் போராளிகள் கொலை போன்ற சிறிலங்க அரசின் அடக்கு முறைகளும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

O O O

## இந்திய வெளிவிவகார அமைச்சர் நாடு திரும்பினார்

இந்திய வெளிவிவகார அமைச்சர் மாண்புமிகு நரசிம்மராவோ அவர்கள் மூன்று நாள் சிறிலங்கா விஜயத்தை முடித்துக் கொண்டு 29.4.88 வெள்ளிக்கிழமை தாயகம் திரும்பினர். நாடற்ற மலையகத் தமிழ் மக்களுக்கு நான் வெகு விரைவில் ஆவன செய்வதாக தன்னிடம் ஜே. ஆர்.ஜெயவர்த்தன உறுதி அளித்ததாக மாண்புமிகு அமைச்சர் பத்திரிகையாளரிடம் கூறினர். ஏற்கனவே 4 லட்சத்துக்கு மேற்பட்டோர் அங்கு நாடற்வர்களாக உள்ளனர். இதில் எத்தனை பேருக்கு உரிமை கிடைக்கும், மிகுதிப்பேருக்கு என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து நாம் பார்க்க வேண்டும்.

O O

## காந்தியம் மீது அடக்குமுறை!

ஈழத்திலுள்ள சமூக சேவை நிறுவனமான காந்தியத்தை தடைசெய்ய சிறிலங்கா அரசு முயற்சி எடுத்து வருகிறது. தமிழ் அகதிகளை குடியமர்த்தும் இந்நிறுவனத்தை தடைசெய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக இயக்குநர் டாக்டர் ராஜசுந்தரம் கைது செய்யப்பட்டு படுகொலை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்